## 2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 31–ஆம் தேதி (31.01.2020) வெள்ளிக் கிழமை காலை 10.15 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்ட நடவடிக்கைகள்.

1. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கீழ்க்கண்டுள்ள ஓராண்டு கால மூன்றாண்டு குத்தகை இனங்கள் 31.03.2020 உடன் மூன்றாண்டுகள் முடிவடைகிறது. 31.03.2020 உடன் உரிமம் முடிவடையும் கீழ்க்கண்டுள்ள் குத்தகை இனங்களை 01.04.2020 முதல் 31.03.2023 முடிய மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு, பொது ஏலம் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் அடங்கிய பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிக்கை ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | மண்டலம் | ஏல இனம் |
|---|---|---|
| 1. | 2 | பேருந்து நிலையத்தில் இரண்டாம் பிளாட்பாரத்தில் 4'x4' அளவில் பூ வியாபாரம் செய்யும் உரிமம் (பூக்கடை எண். 2) |
| 2. | 2 | பேருந்து நிலையத்தில் மினி பேருந்து நிறுத்துமிடத்தின் கீழ்புறமுள்ள இரு சக்கர வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 3. | 2 | பேருந்து நிலைய வணிக வளாக செல்லார் பகுதி இரு சக்கர வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 4. | 2 | நேதாஜி சாலை வணிக வளாகத்தின் தரைத்தளப் பகுதியில் (செல்லார்) இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 5. | 2 | மாநகராட்சி பேருந்து நிலையத்தின் வடபுறம் வி.சி.டி.வி. சாலையின் தென்புறம் சுற்றுச் சுவரின் உள்ளே மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள சுமார்188x34 ச.அடி நீள அகலம் உள்ள சிமெண்ட் கூரை ஷெட் உள்ள இடத்தில் சைக்கிள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 6. | 4 | மாநகராட்சி ஆடு வதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (Slaughter House) |
| 7. | 4 | மூலப்பட்டறை சந்திப்பில் உள்ள கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (ஆண்கள் மற்றும் பெண்கள்) |
| 8. | 2 | வ.உ.சி. பூங்கா வளாகத்தில் ஏ.பி.டி. ரோட்டைப் பார்த்தாற் போல் கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (ஆண்கள் மற்றும் பெண்கள்) |

மேலும் இம்மாநகராட்சிக்குட்பட்ட எம்.ஜி.ஆர். நகர் பகுதி கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 2019-2021-ம் ஆண்டிற்கான குத்தகையினை 20.02.2019-ம் தேதிய பொது ஏலம் மூலம் திரு. ஏ. செல்வராஜ் என்பவருக்கு ஒப்படைக்கப்பட்டது. மேற்படியார் குத்தகையினை 2019-2020 ஓராண்டிற்கு நடத்திய பின்பு, தற்போது தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வீட்டுக்கு வீடு கழிப்பிடம் கட்டியுள்ளதால், கட்டணக் கழிப்பிடத்தை யாரும் பயன்படுத்தாத காரணத்தால் வசூல் செய்ய இயலவில்லை எனத் தெரிவித்து 07.12.2019-ம் தேதிய கடிதம் மூலம் மாநகராட்சி வசம் ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார்.

எனவே திரு. ஏ. செல்வராஜ் என்பவருக்கு வழங்கப்பட்ட மேற்படி குத்தகை இனத்தின் உரிமத்தினை 31.03.2020 உடன் ரத்து செய்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டப்படுகிறது.

மாமன்றத்தின் 11.10.2019-ம் தேதிய 131-ம் எண் தீர்மானத்தில் அனுமதித்துள்ளபடி, சாலையோர பலன் தரும் மரங்கள் 496 மரங்களை 2020-2023-ம் ஆண்டிற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு 2020-2023 ஆண்டிற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்காணும் குத்தகை இனங்களை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கும், பொது ஏல அறிக்கையினை ஈரோடு மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும், தினசரி நாளிதழில் வெளியிடுவதற்கும், அதற்காகும் செலவினத்திற்கும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

1) மேற்குறிப்பிட்டுள்ள வ.எண். 1 முதல் 8 வரையுள்ள குத்தகை இனங்களுடன், எம்.ஜி.ஆர். நகர் பகுதி கட்டணக் கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம், 496 எண்ணிக்கை சாலையோர பலன் தரும் மரங்களின் பலன் அனுபவித்துக் கொள்ளும் உரியம் ஆகிய 10 இனங்களுக்கு 2020-2023-ம் ஆண்டிற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அனுமதி வழங்கலாம்.

2) பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பினை ஈரோடு மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும், தினசரி நாளிதழில் பிரசுரம் செய்வதற்கும், அதற்காகும் செலவினத்திற்கும் அனுமதி வழங்கலாம்.

3) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/193/2020

**217. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

**2.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட குத்தகை இனங்களுக்கு **01.04.2017** முதல் **30.06.2017** வரையிலான காலத்திற்கு வணிக வளாக கடைகள் மூலமாக ரூ.**10,82,872–**ம், வருடாந்திர குத்தகை இனத்திற்கு ரூ.**42,840–**ம் சேவை வரியாக வசூல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையில் ரூ.**10,82,872–**ஐ **02.11.2019–**ல் சேவை வரி அலுவலகத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. வருடாந்திர குத்தகை இனத்திற்கான தொகை ரூ.**42,840–**ஐ சேவை வரி அலுவலகத்திற்கு செலுத்தப்பட வேண்டும்.

மேற்படி தொகைக்கான வட்டி, அபராதம் ஆகியவற்றை தள்ளுபடி செய்யும் பொருட்டு சப்கா விஷ்வாஸ் (Sabka Vishwas Legacy Dispute Resolution Scheme-2019) திட்டத்தில் திரு. சங்கர்நாராயணன் சேவை வரி ஆலோசகர் மூலம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

சேவை வரி அலுவலகத்தின் **26.12.2019–**ந் தேதிய மின்னஞ்சல் கடிதத்தில், சேவை வரித் தொகை ரூ.**42,840–**க்காக சப்கா விஷ்வாஸ் திட்டத்தில் SVLDRS3 சலான் தயார் செய்யப்பட்டு சேவை வரி அலுவலக கணக்கு எண் 002000STXP030122420190700091 40–ல் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி **01.04.2017** முதல் **30.06.2017** வரையிலான காலத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ.**42,840–**ஐ சப்கா விஷ்வாஸ் திட்டத்தில் செலுத்துவதற்கு அனுமதியும்,

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :–

1) இம்மாநகராட்சிக்குட்பட்ட குத்தகை இனங்களுக்கு 01.04.2017 முதல் 30.06.2017 வரையிலான காலத்திற்கு சேவை வரித் தொகைக்கான வட்டி, அபராதம் ஆகியவற்றை தள்ளுபடி செய்யும் பொருட்டு சப்கா விஷ்வாஸ் திட்டத்தில் விண்ணப்பிக்கப்பட்டுள்ளமைக்கு அனுமதி வழங்கலாம்.
2) 01.04.2017 முதல் 30.06.2017 வரையான காலத்திற்கு செலுத்தப்பட வேண்டிய சேவை வரித் தொகை ரூ.42,840–ஐ ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று SVLDRS திட்டத்தின் மூலம் செலுத்தியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/1564/2013

**218. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

3. ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3 சூரம்பட்டி வரிவசூல் மையத்திற்கு புதியதாக தொகை கணக்கீட்டு மெஷன் (Case Counting Machine) வாங்கிட உள்ளூர் நிறுவனத்திடமிருந்து மூன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி தொகை ரூ.12980/–ஐ கொடுத்த GREEN ENVIRO SYSTEMS , ERODE–3, என்பவரின் விலைப்புள்ளியை ஏற்றும் அதற்கான செலவினத்திற்கும் அனுமதித்திட ஆணையர் மற்றும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.பி3/0018/2020

**219. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

4. இம்மாநகராட்சிக்குட்பட்ட ஆர்.கே.வி.சாலையில் தினசரி அங்காடியில் பழைய மார்க்கெட் வணிக வளாக தரைத்தளக் கடை எண்கள் 14, 44, 52, 67, 80, 81, 82 மற்றும் 89 ஆகியவைகளை ஒப்படைக்கும் தேதியிலிருந்து மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 21.01.2020 அன்று நடைபெற்றது. மேற்படி ஏல நாளன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள 32 நபர்கள் வீதம் வைப்புத் தொகை செலுத்தி கலந்து கொண்டு கீழ்க்கண்டவாறு ஏலக் கேள்வித் தொகை கோரியுள்ளார்கள்.

| வ. எ ண். | கடை எண் | கடையின் அளவு | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | ஏலதாரர் பெயர் | ஏலக் கேள்வித் | ஏலதாரர் பெயர் | ஒப்பந்தப் –புள்ளி |

| | | | திரு. / திருமதி. | தொகை ரூ. | திரு. / திருமதி. | கேள்வித் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1. | 14 | 6'x6' அடி | 1. சக்திவேல் முருகேசன் | 8000– | – | – |
| | | | 2. ஜி.பி. செல்வராஜ் | 4500– | – | – |
| | | | 3. எம். விக்னேஷ் | 7600– | – | – |
| | | | 4. கே. பாலாஜி | 6000– | – | – |
| 2. | 44 | 6'x6' அடி | 1. வே. தினேஷ்குமார் | 9200– | – | – |
| | | | 2. எம். சதீஷ்குமார் | 8600– | – | – |
| | | | 3. லோகநாதன் | ஏலக் கேள்வி கோரவில் லை | – | – |
| | | | 4. எஸ். பாரூக் அலி | 8400– | – | – |
| | | | 5. எம். முகம்மது பர்மனுல்லா | 9000– | – | – |
| 3. | 52 | 6'x6' அடி | 1. சிவானந்தம் | 15400– | – | – |
| | | | 2. வே. விஜயா | 15500– | – | – |
| | | | 3. எஸ். தினேஷ் மணிகண்டன் | 10400– | – | – |
| | | | 4. எஸ். பிரியா | 15000– | – | – |
| | | | 5. பி. இளங்கோவன் | 5000– | – | – |
| | | | 6. க. பக்கீர் முகமது | 4700– | – | – |
| | | | 7. சையது முஸ்தபா | 11200– | – | – |
| 4. | 67 | 6'x6' அடி | 1. எஸ். தேவி | 9600– | – | – |
| | | | 2. க. பார்த்திபன் | 6500– | – | – |
| | | | 3. ஏ. கனகராஜ் | 6600– | – | – |
| | | | 4. எஸ். தௌபிக் | 9500– | – | – |
| 5. | 80 | 6'x6' அடி | 1. அமுதா | 6200– | 1. திலகவதி | 9009– |
| | | | 2. வி.ஏ. முகமதுராஜா | 6300– | | |
| 6. | 81 | 12'4 ½' x6' அடி | 1. கே. வைரவேல் | 6000– | 1. முகமது அசாருதின் | 9999– |
| | | | | | 2. ராஜா | 10200– |
| 7. | 82 | 6'x6' அடி | 1. வி. ஜெயந்தி | 3700– | 1. ரமேஷ் | 9000– |
| | | | 2. எம். பஷீர் அகமது | 3800– | – | – |
| 8. | 89 | 6'x6' அடி | 1. ஜெய்கணேஷ் நடராஜன் | 19000– | – | – |
| | | | 2. ஏ. மணிகண்டன் | 18600– | – | – |
| | | | 3. எம். உஸ்மான் | 5800– | – | – |

மேற்கண்டவாறு ஏலம் /ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை வரப்பெற்றுள்ளது. மேற்படி கடைகளுக்கு உச்ச ஏலக் கேள்வித் தொகை கோரியவர்களின் விவரம் கீழ்வருமாறு–

| வ. எண். | கடை எண் | கடையின் அளவு | ஏற்கனவே உள்ள வாடகை மதிப்பு | ஏலதாரர் பெயர் திரு. / திருமதி. | ஏல உச்சக் கேள்வித் தொகை ரூ. | ஒப்பந்தப் –புள்ளி உச்ச கேள்வித் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1. | 14 | 6'x6' அடி | 9000– | சக்திவேல் முருகேசன் | 8000– | – |
| 2. | 44 | 6'x6' அடி | 7900– | வே. தினேஷ்குமார் | 9200– | – |
| 3. | 52 | 6'x6' அடி | 4050– | வே. விஜயா | 15500– | – |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4. | 67 | 6'x6' அடி | 6000– | எஸ். தேவி | 9600– | – |
| 5. | 80 | 6'x6' அடி | 4700– | திலகவதி | – | 9009– |
| 6. | 81 | 12'4 ½' x6' அடி | 8800– | ராஜா | – | 10200– |
| 7. | 82 | 6'x6' அடி | 3300– | ரமேஷ் | – | 9000– |
| 8. | 89 | 6'x6' அடி | 9000– | ஜெய்கணேஷ் நடராஜன் | 19000– | – |

மேற்கண்டுள்ளவாறு கடை எண் **14**–க்கு ஏற்கனவே உள்ள வாடகை மதிப்பினை விட குறைவாக ஏலக் கேள்வி கோரியுள்ளதால், மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும், கடை எண்கள் **44, 52, 67, 80, 81, 82** மற்றும் **89** ஆகியவைகளுக்கு ஏற்கனவே உள்ள வாடகை மதிப்பினை கூடுதலாக ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை வரப்பெற்றுள்ளதால், மேற்படியார்களுக்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் வழங்கவும், ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

அ) கடை எண். **14**–க்கு ஏலக் கேள்வித் தொகை குறைவாக கோரியுள்ளதால் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வழங்கலாம்.

ஆ) கடை எண்கள் **44, 52, 67, 80, 81, 82** மற்றும் **89** ஆகியவைகளுக்கு ஏற்கனவே உள்ள வாடகை மதிப்பினை கூடுதலாக ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை வரப்பெற்றுள்ளதால் உச்ச ஏலக் கேள்வி கோரியவர்களுக்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு குத்தகை உரிமம் வழங்க அனுமதி வழங்கலாம்.

இ) அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/11205/2009

**220.** அ.கு அனுமதிக்கப்பட்டது.

**5.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளத்திலுள்ள வடக்கு பார்த்த ஹால் மற்றும் தெற்கு பார்த்த ஹால் ஆகியவற்றுக்கு **02.03.2018** மற்றும் **21.03.2018**–ல் நடைபெற்ற பொது ஏலத்தில் உச்ச ஏலக் கேள்வி கோரிய திருமதி. சத்யா என்பவருக்கு **01.04.2018** முதல் **31.03.2021** வரையிலான மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி குத்தகையினங்களின் உரிமதாரராகிய திருமதி. சத்யா என்பவர் தனது குடும்ப சூழ்நிலையின் காரணமாக தொழில் துவங்குவதற்கு இயலவில்லை எனவும் மேற்படி கடைகளை இம்மாநகராட்சி வசம் ஒப்படைத்துள்ளார்.

மேலும் பேருந்து நிலைய புதிய வணிக வளாக இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள பிளாக் A, B, C, D ஹால் ஆகியவற்றை **12.10.2018**–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளியில் திரு. பி. விஷ்ணுவர்தன் என்பவருக்கு **01.10.2018** முதல் **30.09.2021** வரையிலான மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படியார் தனது குடும்ப சூழ்நிலை மற்றும் வியாபார சூழ்நிலையின் காரணமாக தொழிலினை தொடர்ந்து நடத்த இயலாது என கடையினை இம்மாநகராட்சி வசம் ஒப்படைத்துள்ளார்.

பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளத்திலுள்ள வடக்கு பார்த்த ஹால் மற்றும் தெற்கு பார்த்த ஹால் ஆகியவற்றின் குத்தகைதாரர் திருமதி. சத்யா மற்றும் பேருந்து நிலைய புதிய வணிக வளாக இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள பிளாக் A, B, C, D ஹால் ஆகியவற்றின் குத்தகைதாரர் திரு. பி. விஷ்ணுவர்தன் ஆகியோர்களுக்கு வழங்கப்பட்ட

குத்தகை உரிமத்தை 31.01.2020 உடன் ரத்து செய்வதற்கும், ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளத்திலுள்ள வடக்கு பார்த்த ஹால் மற்றும் தெற்கு பார்த்த ஹால், பேருந்து நிலைய புதிய வணிக வளாக இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள பிளாக் A, B, C, D ஹால் ஆகிய குத்தகை இனங்களின் உரிமத்தை 31.01.2020 உடன் ரத்து செய்வதற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்தமைக்கும், பின்னர் விடப்படும் ஏலத்தில் குறைவான தொகை கோரப்பட்டால் அந்த வித்தியாசத் தொகையினை இவ்ஒப்பந்ததாரரிடம் வசூல் செய்துகொள்ளவும் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**221 அ.கு அனுமதிக்கப்பட்டது.**

6. இம்மாநகராட்சிக்குட்பட்ட ஆர்.கே.வி. சாலை பின்புறம் உள்ள உட்புறக் கடை எண். 19–ன் குத்தகைதாரர் திரு. கிருஷ்ணன் என்பவரின் குத்தகை உரிமம் 31.03.2019 உடன் முடிவடைந்தது. மேற்படி குத்தகை உரிமத்தினை புதுப்பிக்க வேண்டி புதுப்பித்தல் கட்டணம் மற்றும் 9 மாத வாடகை வைப்புத் தொகையையும், 01.07.2016 முதல் 31.03.2019 வரையிலான காலத்திற்கு செலுத்தப்பட வேண்டிய குத்தகைத் தொகை ரூ.1,54,066–யும் செலுத்துமாறு பல அறிவிப்புகள் அனுப்பப்பட்டும் மேற்குறிப்பிட்ட தொகை செலுத்தப்படாததால் குத்தகையினத்தை பூட்டி சீல் வைக்கப்பட்டது. மேற்படி குத்தகைதாரரான திரு. கிருஷ்ணன் என்பவரின் குத்தகை உரிமத்தை ரத்து செய்வதற்கும்,
ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

ஆர்.கே.வி. சாலை பின்புறம் உட்புறக் கடை எண். 19–ன் குத்தகைதாரரான திரு. கிருஷ்ணன் வாடகைத் தொகையை செலுத்தாததால் மேற்படி குத்தகைதாரரின் உரிமத்தை ரத்து செய்வதற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை எடுத்தமைக்கு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**222. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

7. ஈரோடு மாநகராட்சியில் வார்டு எண்கள் 20 முதல் 28 வரை, 34 முதல் 50 வரை மற்றும் 60 ஆகிய பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள பாதாள சாக்கடைத் திட்ட சேகரிப்பு அமைப்புகளை (Collection System) தனியார் மூலம் மதிப்பீட்டு தொகை ரூ.178.17 இலட்சத்தில் ஒரு வருடகாலத்திற்கு இயக்கி பராமரிப்பு செய்ய 08.03.2019ம் தேதிய மாமன்ற தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடிதம் எண். 8121/2019/UGSS-1 நாள். 21.10.2019ல் வழங்கப்பட்டுள்ளது. தலைமை

பொறியாளரிடமிருந்து தொழில்நுட்ப அனுமதி கடிதம் எண். 26399/2019/DO1 நாள். 14.11.2019 வழங்கப்பட்டு கடந்த 05.12.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

**<u>கீழ்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது:-</u>**

1. M/s. V.N.V Builders(P) Limited, Modhachur, Gobichettipalayam.
2. M/s. Kalaichandran, Virugambakam, Chennai-92.
3. M/s. R.R Thulasi Builders Private Limited, Erode -11.
4. N. Kannan,Gangapuram, Erode – 102.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் 06.12.2019ல் திறக்கப்பட்டு 09.01.2020 அன்று கூர்ந்தாய்வு குழுவில் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட ஒரு ஒப்பந்த புள்ளி நிறுவனம் மட்டும் தகுதி பெற்றுள்ளதாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

M/s. V.N.V Builders(P) Limited, Modhachur, Gobichettipalayam

மேற்கண்ட நிறுவனத்தின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி கடந்த 13.01.2020ல் திறக்கப்பட்டதில் மதிப்பீட்டை விட 4.39 சதவீதம் கூடுதலாக ரூ. 186.00 இலட்சங்கள் என்ற விலை விகிதம் கொடுத்துள்ளது.

மேலும் 13.01.2020 மற்றும் 20.01.2020 ஆகிய தேதிகளில் விலை விகிதத்தினை குறைத்து தர M/s. V.N.V Builders(P) Limited,மொடச்சூர், கோபிசெட்டிப்பாளையம், ஒப்பந்ததாரரை கோரப்பட்டதில் முதல் Negotiation 20.01.2020 நாளிட்ட கடிதத்தில் விலை விகிதத்தை குறைக்க இயலாது எனவும் இரண்டாவதாக 22.01.2020 நாளிட்ட Negotiation கடிதத்தில் விலை விகிதத்தை 185.52 இலட்சங்களாக (4.13 சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம்) குறைத்து வழங்கியுள்ளது.

ஆகவே M/s. V.N.V Builders(P) Limited,மொடச்சூர், கோபிசெட்டிப்பாளையம், என்ற நிறுவனத்தாரின் விலை விகிதம் 4.13 சதவீதம் மதிப்பீனை விட அதிகமாக உள்ளதை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

அனுமதி வழங்கலாம்.

(இ4/2746/2018)

**223. <u>அ.கு அனுமதிக்கப்பட்டது.</u>**

**8.** ஈரோடு மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டப்பணிகள் முடிவடைந்த பகுதியில் வீட்டு இணைப்பு பாதாள சாக்கடையில் இணைப்பு செய்ய சிப்பம் 1ல் உள்ள 34,35,37,46,47,48 வார்டுகளில் வீட்டு இணைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட வார்டுகளில் குடிநீர் திட்டப்பணி மற்றும் மாநகராட்சி பணிகள் மேற்கொள்ளும் பொழுது பாதாள சாக்கடை மனித ஆய்வுகுழி, கவர், மூடிகள் மற்றும் கழிவுநீர் செல்லும் குழாய்கள் அதிகமான இடங்களில் பழுதடைந்து உள்ளது. இதனால் வீட்டு இணைப்புகள் வழங்க முடியவில்லை. எனவே இப்பணிகளை உடன் மேற்கொள் அனுமதிக்கு. மேற்படி பழுதுகள் ஏற்படுத்திய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ரூ. 92.00 இலட்சம் நஷ்ட ஈடு கோரி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் பாதாள சாக்கடை மனித ஆய்வுக்குழிகளை சாலையில் சாலை மட்டத்திற்கு உயர்த்த வேண்டிய அத்தியாவசியப்படுகிறது. மேற்படி பணிகள் பொதுமக்கள் நலன் மற்றும் சாலை பாதுகாப்பு கருதியும் உடன் பணி மேற்கொள்ள வேண்டிய அவசர அவசியம் கருதி மாநகராட்சி சட்டம் 1920 விதி -15ன் கீழ் பணியினை மேற்கொள்ளவும்

இதற்காகும் உத்தேச செலவினம் ரூ. **10.00** இலட்சத்துக்கு அனுமதிக்கும் மேல் நடவடிக்கை தொடரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்படி பணிக்கு ஆணையர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் பணி உத்திரவு வழங்கியமைக்கும், பணிகள் மேற்கொண்டு பட்டியல் வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், மேற்படி பணியின் செலவுக் தொகையை பொதுநிதியில் இருந்து வழங்கவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து பெறப்படும் நஷ்ட ஈட்டுத் தொகையில் பின்னர் ஈடு செய்து கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

அனுமதி வழங்கலாம்.

(இ4/274/2018)

**224. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

9. ஈரோடு மாநகராட்சிக்கு ஊராட்சிக் கோட்டையிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் தனிகுடிநீர் திட்டப்பணியினை அம்ரூத் திட்டத்தில் மத்திய அரசு நிதி ரூ.242.23 கோடி, மாநில அரசு நிதி ரூ.96.89 கோடி மற்றும் உள்ளாட்சியின் பங்குத்தொகையாக ரூ.145.33 கோடி நிதியில் மேற்கொள்வதற்கு மொத்தம் ரூ.484.45 கோடிக்கு அரசாணை(நிலை) எண்.109, நாள்.29.08.2016-ல் நிர்வாக அனுமதியும் ரூ.508.15 கோடிக்கு தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

இம்மாநகராட்சியில் நிதி நிலை பற்றாக்குறையின் காரணமாக மேற்படி திட்ட பணிக்கு மாநகராட்சி பங்குத்தொகை செலுத்த இயலாத நிலையில் உள்ளது. ஆகவே, மாநகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய செலவினத்தினை Smart City நிதியில் இருந்தும், கூடுதல் செலவினங்களை CGF நிதியில் இருந்து ரூ.88.22 கோடி அரசு மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்படி பணிக்கு தொழில்நுட்ப அனுமதி வித்தியாசத்தொகை ரூ.23.70கோடி, ஒப்பந்தப்புள்ளியினால் ஏற்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட கூடுதல் விலை விகித வித்தியாசத்தொகை ரூ.44.52 கோடி மற்றும் GST ரூ.20.00கோடி ஆக மொத்தம் ரூ.88.22 கோடி கூடுதல் செலவினம் ஏற்பட்டு மொத்த செலவினம் ரூ.572.60 கோடி ஆகிறது. ஆகவே, மேற்படி தனிகுடிநீர் திட்டப்பணிக்கு ஆகும் மொத்த செலவினம் ரூ.572.60 கோடிக்கு திருத்திய நிர்வாகஅனுமதி பெற அரசுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்

(இ2/17285/2003)

**225. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

10. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஊராட்சிக் கோட்டை தனிக்குடிநீர் திட்ட குழாய்கள் அமைத்தல் பணிகள், பாதாளச்சாக்கடை திட்டப்பணிகள் முடிவுற்று சேதமடைந்த சாலைகள், புதை மின் வடம் அமைத்ததால் சேதமடைந்த சாலைகள் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த 487.549 கி.மீ. நீள சாலைகளில் இதுவரை அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் 419.293 கி.மீ நீள சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையரக தொலைபேசிச் செய்தியில் மேற்கண்டவாறு சேதமடைந்த சாலைகளில் 14வது நிதிக்குழு (2019-20) திட்டத்தின்கீழ் சீரமைப்பு செய்ய தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க மேற்கண்டவாறு சேதமைடைந்த சாலைகளில் ஏற்கனவே சீரமைப்பு செய்யப்பட்ட சாலைகள் போக எஞ்சியுள்ள சாலைகளில் ஊராட்சிக்கோட்டை தனிக்குடிநீர் திட்டத்தின் வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டும், பாதாளசாக்கடை திட்டபணிகள் முழுமையாக முடிக்கப்பட்ட சாலைகளில் தற்போது 34.74 கி.மீ. நீள சாலைகளை ரூ.13.68 கோடி மதிப்பீட்டில் சீரமைப்பு செய்ய கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| Sl. No. | Name of the Road | Length (in M) | Estimate cost (Rs. In Lakhs) |
|---|---|---|---|
| 1 | Restoration of Damaged B.T Road due to implementation of water supply at Bharathi perumal nagar Ramanpalakattor Perumal malai to adhavan mill road& karuppagounder pudur Ramanpalakattor in ward No.1,2&4 | 1630.00 | 82.00 |
| 2 | Restoration of Damaged B.T Road due to implementation of water supply at Neethi Durai colony main and cross street,Bhavani main road (suriya Nagar) Rajeev nagar &Indirapuram to cm nagar link road in ward No.2&3 | 2345.00 | 96.00 |
| 3 | Restoration of Damaged B.T Road due to implementation of water supply at Palayamariyam amman kovil Panadi durai street Iyandurai vainyardurai street kaliamman kovil street upliyar street-1,2&3 Ajatha nagar Annai sathya nagar main road in ward no.7 | 1752.00 | 88.00 |
| 4 | Restoration of Damaged B.T Road due to implementation of water supply atNerikal madu Oht road , swathi garden main &cross street, Golden garden cross street,Sengottaiyan nagar main and cross street, Madavakadu, jeeva nagar main &cross street& Kamala Nagar Matheswaran Kovil street in ward No.12,13&14 | 1795.00 | 77.00 |
| 5 | Restoration of B.T Surface Damaged due to UGSS and Water supply at Rasampalayam in Ward.No.18, Bharathiyar Nagar in Ward.No.18, MGR Nagar in Ward.No.23 | 2793.00 | 96.50 |

| | | | |
|---|---|---|---|
| 6 | Restoration of B.T Surface Damaged due to UGSS and Water supply at Kallakaradu in Ward.No.18 | 1615.00 | 69.50 |
| 7 | Restoration of B.T Surface Damaged due to UGSS and Water supply at Kamadhenu Nagar in Ward.no.18, Prasanth Street in Ward.No.20, Valliyammai Street -1,2 in Ward.No.20, Radhakrishnan Street -1,2,3 in Ward.No.20 | 2145.00 | 78.00 |
| 8 | Restoration of B.T Surface Damaged due to UGSS and Water supply at Selvam Nagar in Ward.No.21, Jansi Nagar in Ward.No.23, Chinnamuthu Street in Ward.No.25 | 1505.00 | 98.00 |
| 9 | Restoration of B.T Surface Damaged due to UGSS and Water supply Road at Connecting Nasiyanur Main road junction From Thiruvalluvar nagar To Villarasampatti bye pass road junction in Ward.No.31 | 2010.00 | 94.00 |
| 10 | Restoration of B.T Surface Damaged due to UGSS and Water supply at Venus garden Road & Iswarya garden road in Ward no-31 and Naikarkadu road in ward no -35 | 1520.00 | 84.00 |
| 11 | Restoration of B.T Surface Damaged due to UGSS and Water supply at Nasiyanur road to Ganapathi nagar road upto vaikal junction in ward no-32 and Bharathidhasan street,madhavi street ,Sasthiri salai in ward no -36 and Muthampalayam Vaikal road from arch upto JJ nagar Junction in ward no-37 and Kambar street ,Vivekananathar street in ward no-39 | 2830.00 | 94.00 |
| 12 | Restoration of B.T Surface Damaged due to UGSS and Water supply at Periyar nagar-17, S.K.C road-3, Karuppanna samy kovil street-1,2, Santhan karuku-3 in ward no -41, Chidhambaram colony-1,2, Periyar nagar-1,7,10,11,12,13,14 in ward no-44 | 2340.00 | 70.00 |
| 13 | Restoration of B.T Surface Damaged due to UGSS and Water supply at Vinayagar Kovil St -10, 11 in ward no 49, LIC Nagar, Rice mill Road in ward No. 47 Vinayagar Kovil St -12 in ward no 49, Theeran chinnamalai Street in ward no 49. | 3130.00 | 90.00 |

| | | | |
|---|---|---|---|
| 14 | Restoration of B.T Surface Damaged due to UGSS and Water supply at Kollampalayam Housing unit Main Road in ward no 50, Manalmedu ( E.V.N Road to E.M.M Road )in ward No. 51, Cutchery Street in ward no 54 | 1400.00 | 92.00 |
| 15 | Restoration of B.T Surface Damaged due to UGSS and Water supply at Cutchery Street in ward no 54, MeeramoideeSt, Ayyanarappan Kovil Ist St, VVCR Nagar, Marimuthu St, Valayakkara Street, Ranganathan St- 2 in ward No-57 | 3231.00 | 89.00 |
| 16 | Restoration of B.T Surface Damaged due to UGSS and Water supply at Vinayagar Kovil St -3 in ward no 49, Moolapalayam Nehruji st in ward no 47 | 2700.00 | 70.00 |
| **TOTAL** | | **34741.00** | **1368.00** |

எனவே மேற்கண்டவாறு பாதாள சாக்கடைத்திட்டப்பணிகள் முடிக்கப்பட்டும் ஊராட்சி கோட்டை தனி குடிநீர் திட்டத்தில் வீட்டுக்குழாய் வழங்கப்பட்டு முழுமையாக முடிக்கப்பட்ட சாலைகள் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த சாலைகளில் தற்போது கி.மீ. நீள சாலைகளை ரூ.13.68 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கும் பணிகளை 14வது நிதிக்குழு மான்யத் திட்டத்தின் (2019-20) கீழ் மேற்கொள்ள மன்றத்தின் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதியை பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(இ1/6262/2019)

**226.** அ.கு அனுமதிக்கப்பட்டது.

11. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் பாதாள சாக்டைத்திட்டம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டது. இப்பணி மத்திய அரசின் முழு மான்யத்துடன் மேற்கொள்ளப்படுவதாலும் குறித்த காலத்திற்குள் பணியை முடிக்க வேண்டியுள்ளதாலும் இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணியை ஈரோடு மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு-15-ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் அங்கீகரிக்கப்பட்ட Empanneled Consultants மூலம் இப்பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் கீழ் வருமாறு:-

1) M/s. Infrastructure management and advisory service pvt ltd,Chennai — Rs. 45,23,000/-

**2)** M/s. Infra En Consultants, Bangalore, Rs. 39,97,500/-

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ள M/s. Infra En Consultants, நிறுவன விலைவிகிதத்தை குறைத்து வழங்க கோரி இதே எண்ணிட்ட கடிதம் 27/11/2018 நாளன்று கடிதம் அனுப்பட்டதில் ஏற்கனவே குறைத்த விலைவிகிதம் வழங்கியுள்ளதால் மேலும் விலையை குறைக்க இயலாது என தனது 29/11/2018 நாள் கடிதத்தில் மேற்படி M/s. Infra En Consultants, Bangalore, நிறுவனத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பணியின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்ட பிரிவு-15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள எடுத்துக்கொண்டமைக்கும் மற்றும் Preparation of Detailed Project Report for UGSS for added areas of Erode City Municipal Corporation பணியை M/s. Infra En Consultants, Bangalore, என்ற ஆலோசக நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

01. மன்றம் அனுமதி வழங்கலாம்.
02. பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/4031/2018

**227. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

**12.** ஈரோடு மாநகராட்சியின் **1** முதல் **60** வரையுள்ள வார்டுகளில் **2006–2007**–ம் ஆண்டில் தொழில்வரி நிலுவையிலுள்ள இனங்களை ஆய்வு செய்யப்பட்டதில், மேற்படி இனங்களில் எவ்வித நிறுவனங்களும் செயல்படாத காரணத்தால், நகர்மன்றத்தின் **18.09.2006**–ம் தேதிய **755**–ஆம் தீர்மானத்தில் அனுமதித்துள்ளதின்படி கீழ்க்கண்டுள்ள விவரப்படி தொழில்வரியினங்களை இரத்து செய்யப்பட்டுள்ளது.

| வார்டு எண் | முந்தைய நகராட்சி வார்டு எண் (Old Erode) | வரிவிதிப்பு களின் எண்ணிக் கை | தொழில்வரி கேட்புத் தொகை | | | மொத்தம் நிலுவைத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | 2017–2018 | 2018–2019 | 2019–2020 | |
| 15 | 3 | 4 | 944 | 1064 | 1184 | 3192 |
| 15 | 4 | 1 | 236 | 266 | 296 | 798 |
| 25 | 24 | 93 | 22975 | 24738 | 27528 | 75241 |
| 26 | 14 | 171 | 88658 | 45486 | 50616 | 184760 |
| 26 | 15 | 43 | 12398 | 11438 | 12728 | 36564 |
| 27 | 22 | 1894 | 463392 | 504859 | 560624 | 1528875 |
| 27 | 23 | 144 | 34764 | 38304 | 42624 | 115692 |
| 28 | 12 | 527 | 113972 | 144968 | 379982 | 638922 |
| 28 | 16 | 364 | 86504 | 96824 | 107744 | 291072 |
| 29 | 9 | 82 | 19352 | 21812 | 24272 | 65436 |
| 29 | 10 | 110 | 5962 | 6246 | 43552 | 55760 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 30 | 17 | 2 | 472 | 532 | 592 | 1596 |
| 41 | 41 | 8 | 1888 | 2128 | 2368 | 6384 |
| 43 | 27 | 9 | 2124 | 2394 | 2664 | 7182 |
| 44 | 37 | 18 | 4248 | 4788 | 5328 | 14364 |
| 45 | 29 | 35 | 8260 | 9310 | 10360 | 27930 |
| 51 | 44 | 13 | 4808 | 3458 | 3848 | 12114 |
| 51 | 45 | | | | | |
| 52 | 42 | 55 | 23729 | 14630 | 16280 | 54639 |
| 52 | 43 | | | | | |
| 53 | 33 | 4 | 944 | 1064 | 1184 | 3192 |
| 53 | 34 | | | | | |
| 53 | 35 | | | | | |
| 54 | 30 | 27 | 12227 | 7182 | 7992 | 27401 |
| 54 | 31 | | | | | |
| 55 | 21 | 274 | 96803 | 72500 | 81104 | 250407 |
| 55 | 32 | | | | | |
| 56 | 19 | 34 | 9082 | 9044 | 10064 | 28190 |
| 56 | 20 | | | | | |
| 57 | 8 | 41 | 56428 | 11698 | 13016 | 81142 |
| 57 | 18 | | | | | |
| 58 | 5 | 5 | 1375 | 1330 | 1480 | 4185 |
| 58 | 6 | | | | | |
| | மொத்தம் | 3958 | 1071545 | 1036063 | 1407430 | 3515038 |

மேலும் மேற்படி தொழில்வரி விதிப்புகள் இரத்து செய்யப்பட்டு கணினி மென்பொருளில் தொழில்வரியினங்களின் கேட்பிலிருந்து நீக்கம் செய்யப்பட்டது. தற்போது 2006–2007–ம் ஆண்டில் மன்ற அனுமதி பெற்று நீக்கம் செய்யப்பட்ட தொழில்வரியின வரிவிதிப்புகளுக்கு 2017–2018, 2018–2019, 2019–2020–ம் ஆண்டுகளிலும் கணினி மென்பொருளில் தன்னிச்சையாக கேட்பு வரப்பெற்றுள்ளது.

எனவே 2006–2007–ம் ஆண்டில் நீக்கம் செய்யப்பட்ட தொழில்வரியின வரிவிதிப்புகள் 2017–2018 முதல் 2019–2020 வரை கணினி மென்பொருளில் தவறுதலாக தொடர்ந்து வருவதால் மேற்படி தொழில்வரிவிதிப்புகளை நீக்கம் செய்வதற்கும், அதற்கான கேட்புத் தொகை ரூ. 35,15,038–ஐ தள்ளுபடி செய்வதற்கும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

மேற்குறிப்பிட்டவாறு 2006–2007–ம் ஆண்டில் மன்ற அனுமதி பெற்று நீக்கம் செய்யப்பட்ட தொழில்வரியின வரிவிதிப்புகளுக்கு 2017–2018, 2018–2019, 2019–2020–ம் ஆண்டுகளிலும் கணினி மென்பொருளில் தவறுதலாக தொடர்ந்து வருவதால், மேற்படி தொழில்வரிவிதிப்புகளை நீக்கம் செய்வதற்கும், அதற்கான கேட்புத் தொகை ரூ. 35,15,038–ஐ தள்ளுபடி செய்வதற்கும் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/1787/2018

**228.** அ.கு அனுமதிக்கப்பட்டது.

**13.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளத்திலுள்ள வடக்கு பார்த்த ஹால் மற்றும் தெற்கு பார்த்த ஹால் ஆகியவற்றின் குத்தகைதாரர் திருமதி. சத்யா என்பவர் தனது குடும்ப சூழ்நிலையின் காரணமாக தொழில் துவங்க இயலவில்லை என மேற்படி குத்தகையினங்களை இம்மாநகராட்சி வசம் ஒப்படைத்ததால் குத்தகைதாரது உரிமம் **31.01.2020** உடன் ரத்து செய்யப்பட்டது.

மேலும் பேருந்து நிலைய புதிய வணிக வளாக இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள பிளாக் A, B, C, D ஹால் ஆகியவற்றின் குத்தகைதாரர் திரு. பி. விஷ்ணுவர்தன் என்பவர் தனது குடும்ப சூழ்நிலை மற்றும் வியாபார சூழ்நிலையின் காரணமாக தொழிலினை தொடர்ந்து நடத்த இயலாது என கடையினை இம்மாநகராட்சி வசம் ஒப்படைத்ததால் குத்தகைதாரது உரிமம் **31.01.2020** உடன் ரத்து செய்யப்பட்டது.

எனவே பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளத்திலுள்ள வடக்கு பார்த்த ஹால், தெற்கு பார்த்த ஹால் மற்றும் பேருந்து நிலைய புதிய வணிக வளாக இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள பிளாக் A, B, C, D ஹால் ஆகியவற்றுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்படி ஏல இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.**50,000**–க்கும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

அ) பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளத்திலுள்ள வடக்கு பார்த்த ஹால், தெற்கு பார்த்த ஹால் மற்றும் பேருந்து நிலைய புதிய வணிக வளாக இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள பிளாக் A, B, C, D ஹால் ஆகியவற்றுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அனுமதி வழங்கலாம்.

ஆ) மேற்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ. **50,000**–க்கும் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ**1/982/2017**

**229.** **அ.கு அனுமதிக்கப்பட்டது.**

**14.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளக் கடை எண். ஏ பிளாக்–ன் உரிமதாரர் திரு. பி. ரகுநந்தன் என்பவர் மேற்படி கடைக்கு உரிமம் புதுப்பித்தலுக்கான **9** மாத வாடகை வைப்புத் தொகை ரூ.**5,98,383**–ம், வாடகைத் தொகை ரூ.**26,39,080**– மற்றும் சேவை வரியுடன் ஆக மொத்தம் ரூ.**37,12,503**– செலுத்தாததால், **18.01.2019** அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டது. மாமன்ற தனி அலுவலரின் **24.01.2019**–ந் தேதிய தீர்மான எண். **217**–ல் ரத்து செய்யப்பட்டு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கப்பட்டுள்ளதன்படி **15.02.2019** அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் உச்ச ஏலக் கேள்வித் தொகையாக ரூ.**1,02,000**–க்கு கோரிய திரு. பி. சுரேஷ் என்பவருக்கு குத்தகை உரிமம் ஒப்படைக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் **15.02.2019**–ம் தேதிய **239**–ஆம் எண் தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி மேற்படி குத்தகை இனத்தினை திரு. பி. சுரேஷ் என்பவருக்கு ஒப்படைக்கும் பொருட்டு அதற்கான **24** மாத வாடகைத் தொகையினை வைப்புத் தொகையாக செலுத்துமாறு **18.02.2019**–ல் அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேலும் மேற்படி கடையினை உச்ச ஏலக் கேள்வி கோரிய திரு. பி. சுரேஷ் என்பவருக்கு ஒப்படைக்க வேண்டியுள்ளதால், பூட்டி சீல் வைக்கப்பட்ட கடையினை **05.03.2019**–ம் தேதி காலை **11.00** மணிக்கு காவல் துறையினர், கிராம நிர்வாக

அலுவலர் மற்றும் பத்திரிக்கையாளர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அப்போது மேற்படி கடையில் பெரும்பாலான இடங்களில் மரம் மற்றும் கண்ணாடியிலான தடுப்புகள் அமைக்கப்பட்டிருந்தது. அதனை முழுமையாக கணக்கெடுக்கப்பட்டு அதற்கான மதிப்பீட்டினை கணக்கீடு செய்து, அரசு விதிகளின்படி பொருட்களை ஏலம் கோர உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், மர அலமாரி, கண்ணாடி தடுப்புச்சுவர் (Partitions) ஆகியவற்றை அகற்றி கடையினை உச்ச ஏலக் கேள்வி கோரிய திரு. பி. சுரேஷ் என்பவருக்கு ஒப்படைக்கும் வகையில் பணியினை முடித்துக் கொடுக்குமாறும் மண்டலம்–2–ன் பொறியர் பிரிவிற்கு தெரிவிக்கப்பட்டது.

மேலும் மேற்படி கடையில் தடுப்புகளை அகற்றும் பணி முடிவு பெறாமலும், சம்பந்தப்பட்ட குத்தகைதாரர் 24 மாத வாடகைத் தொகையினை வைப்புத் தொகையாக செலுத்துமாறு அனுப்பப்பட்ட அறிவிப்பினை பெற்றுக் கொண்டும் தொகை செலுத்தாமல் இருந்து வந்தார்.

மேற்படி கடையில் உள்ள தடுப்புகளை அகற்றும் பணியின் முன்னேற்ற அறிக்கையினை தெரிவிக்குமாறு சம்பந்தப்பட்ட மண்டலம்–2–ன் உதவி ஆணையருக்கு 05.11.2019–ம் தேதி அறிவிப்பு அனுப்பப்பட்டதில், அவர் தனது 20.11.2019–ம் தேதிய கடிதத்தில் கடையின் பெரும்பாலான இடங்களில் மரத்திலான அலமாரிகள் மற்றும் கண்ணாடியாலான தடுப்புகள் சுவற்றோடு பொருத்தப்பட்டிருந்ததால் அதனை அகற்றும் போது மிகுந்த சேதாரம் ஏற்படும் என்பதால் அதனை அகற்றி சம்பந்தப்பட்ட பொருட்களை ஏலம் அடிப்படையில் எடுத்துக் கொள்ள மேற்படி குத்தகைதாரர் மற்றும் வெளியாட்கள் யாரும் முன்வரவில்லை. மேலும் மேற்படி சூழ்நிலையில் கடையிலுள்ள பொருட்களை மதிப்பீடு செய்து அகற்றி ஏலம் விடும் பணிகளை மேற்கொண்டிருந்த மண்டலம்–2–ன் இளம் பொறியர் திரு. பி. சாமிநாதன் 24.10.2019–ல் காலமாகிவிட்டபடியால், மேற்படி பணிகள் முழுமை பெறாமல் இருந்து வந்தது என தெரிவித்துள்ளார்.

மேலும் உச்ச ஏலக் கேள்வி கோரிய குத்தகைதாரர் திரு. பி. சுரேஷ் என்பவர் 24 மாத வாடகைத் தொகையினை வைப்புத் தொகையாக நாளது தேதி வரை செலுத்தப்படாததால், மேற்படி ஏலத்தை ரத்து செய்தும், வைப்புத் தொகையை பறிமுதல் செய்தும் மற்றும் மேற்படி கடையில் உள்ள பொருட்களை அகற்றி ஏலம் விடும் பணிகள் முடிவு பெற்ற பிறகு மேற்படி குத்தகை இனத்தை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. மேற்படி உச்ச ஏலக் கேள்வி கோரிய குத்தகைதாரர் திரு. பி. சுரேஷ் 24 மாத வாடகைத் தொகையினை வைப்புத் தொகையாக செலுத்தப்படாததால் மேற்படி குத்தகையின ஏலத்தினை ரத்து செய்ய அனுமதி வழங்கலாம். அன்னாரின் வைப்புத் தொகையை பறிமுதல் செய்யலாம்.
2. மேற்படி குத்தகையினத்தில் உள்ள மர அலமாரி மற்றும் கண்ணாடியிலான தடுப்புகளை அகற்றி பொறியர் பிரிவில் பொது ஏலம் விடப்பட்ட பிறகு இக்குத்தகையினத்தினை ஏலம் கோர அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ2/5256/2015

**230.** **அ.கு அனுமதிக்கப்பட்டது.**

15. ஈரோடு மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் நாச்சியப்பா வீதியில் உள்ள தினசரி காய்கறி சந்தையினை நவீனமயமாக்கும் பணிக்கு உரிய வடிவமைப்பு மற்றும் விரிவான திட்ட அறிக்கையினை தனியார் ஆலோசகர் நியமித்து (DPR) தயார் செய்யும் பணியை மேற்கொள்ள தனிஅலுவலரின் முன் அனுமதி நாள்.11.10.2019-ல் வழங்கப்பட்டதை தொடர்ந்து E-Tendering மற்றும் மூடி முத்திரையிட்ட இரு உறை முறையில் 05.11.2019-அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. இதில் இரண்டு நிறுவனங்களும் இப்பணிக்கான 1% டேவணித் தொகையை செலுத்தியுள்ளனர்.

| | |
|---|---|
| 1. | M/s. Glency Docmra Consultants India Pvt. Ltd,Chennai |
| 2. | M/s. Eclat Designs & Infrastructure Pvt. Ltd,Chennai |

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் 08.11.2019 தேதியன்று திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் M/s.Eclat Designs & Infrastructure Pvt. Ltd. Chennai நிறுவனத்தினர் ஒப்பந்தப்புள்ளிக்கு தேவையான ஆவணங்கள் முழுமையாக ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்காமல் ஒப்பந்தப்புள்ளி வழங்கியிருந்ததால் தொழில்நுட்ப தகுதிபெறவில்லை. மற்றொரு நிறுவனமான M/s. Glency Docmra Consultants India Pvt. Ltd, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி, தொழில்நுட்ப தகுதிக்கு தேவையான ஆவணங்களை முழுமையாக ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்துள்ளனர்.

எனவே தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ள மேற்கண்ட M/s. Glency Docmra Consultants India Pvt. Ltd, Chennai நிறுவனத்தின் price bid-ஐ திறந்து மேல்நடவடிக்கை எடுக்கலாம் என கூர்ந்தாய்வுக்குழுவில் முடிவு செய்யப்பட்டது. அதன்படி 11.11.2019 அன்று திறக்கப்பட்டது. அவ்வாறு திறக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புநோக்குகையில் பெறப்பட்டவிபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| M/s. Glency Docmra Consultants India Pvt. Ltd, Chennai | Rs.21,74,000/- (Excluding GST) |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தகுதிவாய்ந்த M/s. Glency Docmra Consultants India Pvt. Ltd, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் அதிகமாக உள்ளதால் மேற்படி நிறுவனத்திடம் மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க, இவ்வலுவலக கடிதம் எண்.இ1/444/2018-ன்படி முதலாம் கேட்பு அறிவிப்பு 12.11.2019 அன்று கொடுக்கப்பட்டது. மேற்படி நிறுவனம் தனது 14.11.2019 தேதிய கடிதத்தில் விலையை குறைத்து ரூ.21,20,000/-ற்கு (Excluding GST) விலைவிகிதம் வழங்கியுள்ளார்கள்.

அதனைத் தொடர்ந்து, மேற்படி நிறுவனத்திடம் மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க, இவ்வலுவலக கடிதம் எண்.இ1/444/2018-ன்படி இரண்டாம் கேட்பு அறிவிப்பு 16.11.2019 அன்று கொடுக்கப்பட்டது. மேற்படி நிறுவனம் தனது 19.11.2019 தேதிய கடிதத்தில் மேலும் விலையை குறைத்து ரூ.12,40,000/-ற்கு (Excluding GST) விலைவிகிதம் வழங்கியுள்ளார்கள். எனவே M/s. Glency Docmra Consultants India Pvt. Ltd, Chennai அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

01. அனுமதி வழங்கலாம்.
02. பணியின் அவசர அவசியத்தை கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் ஒப்புதல் வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/444/2018

**231.** **அ.கு அனுமதிக்கப்பட்டது.**